# சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி

## MCOP No. 197/2023

20.06.2024

ம.சா.1.கோமதி க/பெ.ராஜன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2 ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-

இந்த மனு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவர் விபத்தில் இறந்ததால் தாக்கல் செய்துள்ளேன். கணவர் பெயர் என்னவென்றால் ராஜன். எனக்கு திருமணம் நடந்த தேதி நினைவில்லை. எனக்கும், எனது கணவருக்கும் இடையே மன்னார்குடி நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நடைபெற்றது என்றால் அப்படி எந்த வழக்கும் நடைபெறவில்லை. மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு எண் 98/2012 என நடைபெற்றது என்றால் அவ்வாறு இல்லை. அதில் எனக்கு வழக்கறிஞரும் ஆஜரானால் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த வழக்கில் 03.07.2013 ல் விவாகரத்து வழங்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் இல்லை. அந்த காரணத்தினால் இந்த மனுவை தாக்கல் செய்ய எனக்கு எந்தவிதமான சட்டப்படியான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சுகந்தி என்பது யாரென்றால் எனக்கு தெரியாது. அவர் என் கணவரின் இரண்டாவது மனைவி என்றால் சரியல்ல. நான் ஒருவர் மட்டும் தான் என் கணவரின் மனைவி ஆவேன். சுகந்தி என்பவர் திருப்பூரில் என் கணவர் இறந்த விபத்து சம்பந்தமாக நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறாகும். அந்த வழக்கு எண். 1771/2018 என்றால் எனக்கு தெரியாது. நான் நஷ்டஈடு கோரவேண்டும் என்றால் மேற்சொன்ன திருப்பூர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கில் என்னை ஒரு தரப்பினராக சேர்க்கச் சொல்லி மனு தாக்கல் செய்து அதன்பின்னரே எனக்கு நஷ்டஈடு கிடைப்பது பற்றி முடிவு செய்யமுடியும் என்றால் அவ்வாறில்லை. எனக்கு நஷ்டஈடு வழங்குவதை அந்த நீதிமன்றம் தான் முடிவு செய்யவேண்டும் என்றால் சரியல்ல. புதிதாக இந்த நீதிமன்றத்தில் எந்த வழக்கும் தாக்கல் செய்யமுடியாது என்றால் சரியல்ல. என் கணவருக்கு 2 வது திருமணம் நடைபெற்றது எனக்கு தெரியாது என்றால் நான் மட்டும் தான் மனைவியாவேன். எனக்கு விவாகரத்து கிடைத்தபிறகு எனது கணவர் 2 வது திருமணம் செய்துகொண்டு அந்த பெண்ணோடு தான் இறக்கும்வரை வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. என் கணவர் 2 வது திருமணம் செய்து அந்த பெண்ணோடு வாழ்ந்து வந்த காலத்திலும் நான் எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான்

என் கணவரின் சட்டப்படியான வாரிசு இல்லை என்றாலும் நான் இந்த மனுவை தாக்கல் செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. நானும் என் மகனும் தான் என் கணவருக்கு வாரிசுகள் ஆவோம். இந்த மனுவில் நான் தாக்கல் செய்த குடும்ப அட்டை 2005ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு காலகட்டத்தைச் சேர்ந்தது என்பதால் அது காலாவதியாகிவிட்டது என்றாலும், செல்லாது என்றாலும் சரியல்ல. அதனால் இந்த மனுவில் எனக்கு நஷ்டஈடு பெறுவதற்கான சட்டப்படியான உரிமை எதுவும் கிடையாது என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. விபத்து குறித்து காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் ரோட்டில் சென்ற ஒரு நபர் புகார் கொடுத்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டியின் கவனக்குறைவால் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோன ராஜனின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ராஜனுக்கு முறையான ஒட்டுநர் உரிமம் இல்லை என்றாலும், அவர் தலைக்கவசமும் அணியவில்லை என்றால் சரியல்ல. அவர் தலைக்கவசம் அணிந்திருந்தால் மரணத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள நஷ்டஈடு அதிகம் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

திருமதி. கோமதி

Sd/- திரு.எஸ்.முத்துராமன்,
சார்பு நீதிபதி (மு.கூ.பொ)
திருத்துறைப்பூண்டி.